STC 494/2022

09.10.2023

பு.சா.1,

பெயர்: அருண் ஆதித்யா

த/பெ. கிருஷ்ணராஜ்

குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. **Accused counsel present.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாய்ராம் ஹெல்த் கேர் என்ற நிறுவனத்தில் 2000 ம் ஆண்டு முதல் உரிமையாளராக இருந்துவருகிறேன் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தை நான் பதிவு செய்யவில்லை. மேற்படி நிறுவனத்தை proprietor ஆக இருந்து நடத்திவருகிறேன். வரி வகையறாக்கள் செலுத்திவருகிறேன். எங்கள் நிறுவனத்தில் நாங்கள் பொருட்களை உற்பத்தி செய்யவில்லை, வாங்கி விற்பனை செய்கிறோம். அதற்குண்டான கணக்கு வழக்குகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கிறோம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் செயல்படும் இடம் வாடகை இடமாகும். எங்கள் நிறுவனத்தில் உள்ளே வரும் பொருட்களுக்கும் விற்பனை செய்யும் போது வெளியே அனுப்பும் பொருட்களுக்கும் Purchase & Sales Registers ஐ பராமரித்துவருகிறோம்.

எங்கள் நிறுவனத்தில் வாயில் காவலர் உள்ளார் என்றால் சரிதான், ஆனால் வந்துபோகும் வாகனங்களை பரிசோதனை செய்வேனா என்றால் அந்தளவிற்கு பெரிய நிறுவனம் அல்ல. எங்கள் நிறுவனத்தில் இருந்து பொருட்கள் எடுத்துச்செல்லும்போது அந்த வாகனத்தின் பதிவு எண்ணை நாங்கள் பதிவு செய்வோம் என்றால் சரிதான். எனது புகாரில் எதிரியை முதலாளி என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2,3 வருடங்களாக வில்வாத்திரி ஆயுர்வேத மருத்துவமனைக்கு பொருட்களை அனுப்பிவருகிறேன். எங்கள் நிறுவனத்திற்கும் எதிரி நிறுவனத்திற்கும் இடையே நடக்கும் விற்பனை பரிமாற்றம் குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

எதிரியின் நிறுவனத்திற்கும் எங்கள் நிறுவனத்திற்கும் கடந்த 2, 3 ஆண்டுகளாக நடந்த பரிவர்த்தனை ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நான் தயாராக உள்ளேன். 02.04.2022 ம் தேதி எதிரி நிறுவனத்தார் பொருட்களை வாங்கியதாக நான் என் புகாரில் தெரிவித்துள்ளேன், அதற்குண்டான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் சமர்ப்பித்துள்ளேன். என் பிரமாணவாக்குமூலத்திலும் மேற்படி விபரத்தை நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி 07.11.2023 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.